அசல்

7-3-35 சா. அ. ச.

அசல் - 1.

Replied. 13.3.35

மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்
81-வது ஜனன விழாக் கமிட்டி

தலைவர். திரு. அ. சாமி ஐயர்.
காரியதரிசிகள். திரு. வெ. சாமிநாத சர்மா.
,, ,, அ. கருப்பன் செட்டியார்.
பொக்கிஷதார். திரு. ராம. சோமசுந்தரம்.

110, 48-வது வீதி,
கிழக்கு ரங்கூன் 7. 3. 1935.

பிரம்மஸ்ரீ மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள்
தியாகராஜ விலாசம், திருவட்டீஸ்வரன் பேட்டை, சென்னை.

அன்பு கெழுமிய ஐயா,

நலம். நேற்று (6-3-35) மாலை, இவண் நடை பெற்ற பொதுக்கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானத்தின் பிரதி ஒன்றை இதனுடன் அனுப்பியுள்ளேன். தங்களுடைய 81 வது பிறந்த தினத்தில் நடைபெற்ற இவ்விழாவில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பமும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது பற்றிப் பெரிதும் மகிழ்வெய்துகிறேன்.

பல அலுவல்கள் காரணமாக வெளிநாடுகள் போந்துள்ள தமிழர்கள், தமிழன்னையையும் அவளுக்கு மணியாரங்கள் பல அணிந்து மகிழ்ந்த தவப்புதல்வரான தங்களையும் மறந்து விடவில்லை யென்பதைக் காட்டுவதற் கறிகுறியாகவே, இங்கு இந்த விழா கொண்டாடப்பட்டதாக நான் கொள்கின்றேனே யன்றி, தங்களுடைய சலியாத தமிழ்த் தொண்டிற்கு இஃதொரு சிறு நன்றியுமாகாதென்பதை நான் நன் குணர்வேன்.

தமிழ்த் தெய்வத்தின் திருவருள் தங்களுக்குப் பூரணமாக உண்டாக வேண்டுமென்று பிரார்த்திக்கும்,

அன்புள்ள
[signature]
பொதுக் கூட்டத் தலைவர்

அசல்

7-3-35 சா. அ. ச.

அசல் - 1.

உ

மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்

81-வது ஜனன விழாக் கமிட்டி

தலைவர். திரு. அ. சாமி ஐயர்.

காரியதரிசிகள். திரு. வெ. சாமிநாத சர்மா.

„ „ அ. கருப்பன் செட்டியார்.

பொக்கிஷதார். திரு. ராம. சோமசுந்தரம்.

110, 48-வது வீதி,

கிழக்கு ரங்கூன் ______ 1935.

பொதுக்கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானம்

"பர்மா நாட்டுக்கோட்டை செட்டியார்கள் சங்கம், இந்திய மாதர் சங்கம், சோலியா முஸ்லிம் அசோஸியேஷன், கிறிஸ்தவ வாலிபர் சங்கம், ஹிந்து சோஷல் கிளப், ஹிந்து டிராமடிக் கிளப், கம்பை தனவைசியர் கல்வி நிலயம், யாதவ வாலிப சங்கம், சக்தி சிவானந்த சபை, சைவ சமாஜம், தென் கொனந்த சபை, தனவைசிய இளைஞர் சங்கம், தென்னிந்திய யாதவர் சங்கம், சைவ சங்கம், இந்து நாடார் மகாஜன சபை முதலியவைகளின் சார்பாகக் கூட்டப்பெற்ற பர்மா வாழ் தமிழர்களின் இப்பொதுக்கூட்டம் மஹா மஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின் 81 வது பிறந்த தினமாகிய இன்று அவர் இதுகாறும் தமிழுக்குச் செய்துள்ள தொண்டினைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இன்னும் பல ஆண்டுகள் அவர் வாழ்ந்து தமிழ்த் தொண்டு செய்யப் போதிய ஆயுளையும் தேக சௌக்கியத்தையும் அருளுமாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறது."

[illegible signature]

பொதுக் கூட்டத் தலைவர்

அசல்

7-3-35 சா.அ.ச.

அசல்-1.

௫